**பொலன்னறுவை பிரதேச சபை – 2023**
---------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலன்னறுவை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான சொத்துக்கள் பெறுப்புக்கள் பற்றிய கூற்று, தேறிய சொத்துக்கள் /உரிமை மூலதனம் மாற்றமடைதல் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அளவு ரீதியான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது உத்தரவின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தி வரையான விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2023 திசெம்பர் 31ல் உள்ளவாறான பொலன்னறுவை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதன் நிதிச் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் ஆகியன உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கான அடிப்படையினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சியங்கள் போதுமானதும் பொருத்தமானதும் ஆகும் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அது தொடர்பாக நிர்வகிக்கும் தரப்பினர்களதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் இலங்கையின் அரச துறையின் கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாமானதுமான நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினர்களுக்கு உரியதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் நடைமுறை நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமானவாறு

தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடய எல்லை (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஓட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அளவு ரீதியான பொய்யான கூற்றுக்கள் அற்றவை என நியாயமான ஓர் உறுதிப்பாட்டினை வழங்குதல் மற்றும் எனது கருத்து உள்ளடங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொகுக்கப்பட்ட அறிக்கையினை வெளியிடல் எனது நோக்கம் ஆகும். நியாயமான உறுதிப்பாடு உயர்வான தரத்தினைக் கொண்ட ஓர் உறுதிப்பாடாக அமைகின்ற போதும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்ற உறுதிப்பாடாக அமைய மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டு விளைவின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக் கூடும் என்பதுடன் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அதனைப் பயன்படுத்துபவர்களினால் பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் சந்தேகக் கண்ணோட்டத்தில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் அபாயங்களை அடையாளம் காணும் போது மற்றும் மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் அபாயத்தினைக் குறைப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சாட்சியங்களைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாக உள்ளது. பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினை விடவும் மோசடி காரணமாக பாரிய தாக்கம் ஏற்படும் என்பதுடன் தவறான செயற்பாடு, போலி ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்றே வழிவிடுதல், அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை வழிவிடுதல் ஆகியன மோசடிகள் நிகழ்வதற்கான காரணங்கள் ஆகும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக இல்லாத போதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பொருத்தப்பாடு கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏற்புடைய வெளிக்கொணர்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமானவாறு உள்ளக்கப்பட்டுள்ளதென மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரை மற்றும் தேவையான எச்சந்தர்ப்பத்திலும் பின்வரும் விடயங்கள் பற்றிப் பரிசோதிப்பதற்காக கணக்காய்வு விடய எல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது பிரதேச சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதற்கு இயலுமானவாறு அதன் ஒழுங்கமைப்பு, முறைமை, நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் அளவு ரீதியாகவும் திட்டமிடப்பட்டுள்ளதா என்பது பற்றி மற்றும் குறித்த முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணப்பட்டு வருகின்றனவா என்பது பற்றி;

- ஏற்புடைய எழுதப்பட்ட சட்டம் அல்லது பிரதேச சபையால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட உத்தரவுகளுக்கு அமைவாக பிரதேச சபை செயற்பட்டுள்ளதென,
- தனது அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதென,
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாக மற்றும் பயனுள்ளவாறு கால வரையறைக்குள் மற்றும் ஏற்புடைய சட்டவிதிகளுக்கு அமைவாக பெறுகைச் செயன்முறை மேற்கொண்டு பயன்படுத்தப்பட்டள்ளதென.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

(அ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திசைவாக உள்ளன.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)ஈ (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னைய ஆண்டு என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் சனவரி முதுல் நவம்பர் வரை கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டைப் பணங்கள் வருமானம் ரூபா.35,290,414 குறைவாக கணக்குகளில் பதியப்பட்டதுடன் திசெம்பர் மாதத்திற்கான வருமானத்தை இனம் கண்டு கணக்குகளில் பதிவு செய்யப்படாத காரணத்தால் ஆண்டின் வருமானம் மற்றும் வருமதி கணக்கு மீதிகள் அந்த அளவால் குறைத்துக் காட்டப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | சரியாக கணக்குகளை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் வருமதியான முத்திரைக் கட்டணம் ரூபா.8,791,150 ஆல் குறைத்து கணக்குகளில் பதிவு செய்யப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்குகளை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டுக்காக அறவிடப்பட வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா.384,383 வருமதி வட்டி வருமானமாக கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கிடைக்க வேண்டியவட்டி வருமானத்தை சரியாக சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா.71,105 நிலுவைச் சம்பளம் செலுத்துதல் நிதிக் கூற்றுக்களில் தவற விடப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அட்டுறு அடிப்படையில் கணக்ககளை சமர்ப்பித்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் வழங்குநர் கடன்படுநர் பெறுமதி இரண்டு தடவைகள் கணக்கிடப்படல் காரணமாக மீதி ரூபா.201,200 அதிகமாக காட்டப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்குகளை சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையில் கருத்து தெரிவித்தல்** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட 04 கணக்கு விடயங்கள் தொடர்பான பெறுமதி அதற்கு ஏற்புடைய உப அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதியுடன் ரூபா.105,447 இணங்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு ஏடுகள் மற்றும் ஆவணங்களை ஒப்பிட்டு சரியான பெறுமதிகளை இனம் காணல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **சபையில் கருத்து தெரிவித்தல்** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | பொது நிர்வாக சுற்றறிக்கைகள் | | | |
| | 2016 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 30/2016 இன் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்குப் பின்னர் 12 மாத காலத்திற்குப் பின்னர் அல்லது 26000 கி.மீற்றர் ஓட்டத்தின் பின்னர் அல்லது எஞ்சின் தொடர்பான பிரதான பழுதுபார்ப்பின் பின்னர் ஆகிய காரணங்களுள் முதலில் வரும் சந்தர்ப்பத்தின் பிரகாரம் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதும் சபையின் 05 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த ஆண்டு முதல் எரிபொருள் விரயப் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | திறைசேரி சுற்றறிக்கை<br><br>2019 நவம்பர் 19 ஆம் திகதிய 2019/14 ஆம் இலக்க வடமத்திய மாகாண திறைசேரி சுற்றறிக்கை<br><br>04 ஆம் பந்தி | 2023 திசெம்பர் 31 இல் ஏற்புடைய பொருட் கணிப்பீட்டுப் பணிகளை நிறைவு செய்து 2024 பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் அதன் பிரதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | துரிதமாக அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானங்களை மிகைத்த செலவுகள் ரூபா.2,719,241 இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானங்களை மிகைத்த செலவுகள் ரூபா. 3,504,601 இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** |
| | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** | **ரூ.** |
| வீதவரியும் வரியும் | 1,469,842 | 2,167,668 | 2,645,906 | 1,288,958 | 1,321,500 | 1,545,544 | 873,133 | 1,767,196 |
| வாடகை | 5,970,935 | 3,844,449 | 3,660,616 | 1,303,333 | 3,433,710 | 4,596,668 | 3,771,718 | 1,119,500 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 269,250 | 375,063 | 360,813 | 46,250 | 377,000 | 385,800 | 353,800 | 32,000 |
| ஏனைய வருமானம் | 75,086,430 | 39,238,000 | 71,762,246 | 12,817,319 | 72,314,860 | 29,686,466 | 16,649,151 | 45,341,565 |
| மொத்தம் | 82,796,457 | 45,625,180 | 78,429,581 | 15,455,860 | 77,447,070 | 36,214,478 | 21,647,802 | 48,260,261 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றுகை

சபையின் வருமானச் சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளது

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி** | | |
| (i) | 05 ஆண்டுகளுக்கு ஒரு தடைவ வீதவரி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதும் 2012 ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு வீதவரி அறவிடப்பட்ட போதும் ஆண்டின் இறுதியில் ரூபா.1,288,958 நிலுவை வருமானம் காணப்பட்டது. | நிலுவை வீதவரி வருமானம் மற்றும் நடைமுறை ஆண்டின் வீதவரி வருமானம் அறவிடலுக்காக நடமாடும் சேவைகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக | உரிய வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 02 கிராம அலுவலர் பிரிவுகளை அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக இனம் கண்டு 2023 ஆம் ஆண்டு சனவரி 05 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட போதும் ஆதன மதிப்பீட்டு அறிக்கையை பெறாமை காரணமாக வீதவரியை அஅறவிடுவதற்கு முடியவில்லை. | மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அனுமதி கிடைத்த பின்னர் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | அபிவிருத்தி செய்த பிரதேசங்களில் இருந்து வீதவரி அறவிடுதல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலுவை கடை வாடகை மற்றும் தண்டப்பணம் ரூபா.581,771 காணப்பட்டது. | கொடுப்பனவு செலுத்த தவறும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் தாமதமின்றி தீர்க்கப்பட வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப் பத்திர கட்டணம்** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா.947,460 நிலுவை வியாபார அனுமதிப்பத்திர, கைத்தொழில் வரி மற்றும் வியாபார வரி வருமானம் காணப்பட்டது. | வரி அறவிடுவதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமானம் உரியவாறு அஅறவிடப்படல் வேண்டும். |
| **(ஈ)** | **ஏனைய வருமானங்கள்** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலுவை கழிவுக் கட்டணம் ரூபா.640,000 இருந்ததுடன் நிலுவைக் கட்டணம் தொடர்பில் செயற்படுவதில் தாமதம் நிலவியது. | நிலுவைத் தொகையை பதவழிப்பதற்கான அனுமதி கிடைத்த பின்னர் ஆவணங்களில் இருந்து உரிய நிலுவைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| **<u>செயற்பாட்டுத் திட்டம்</u>** | | |
| வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் சபையால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த 25 செயற்பாடுகள் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் வரவு செலவுப் பணிகளுக்கு ஏற்புடைய வகையில் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக வரவு செலவுத் திட்டம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும். |

### 3.2 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச அபிவிருத்தி உதவியாளர் கருத்திட்ட ஒதுக்கீடுகளின் கீழ் ரூபா.19,269,077 செலவு செய்து தேவைப்பாட்டை உரியவாறு இனம் காணாமல் 2022 ஆம் ஆண்டு நிர்மாணிப்புக்கள் நிறைவு செய்யப்பட்ட சேவாகம பொது பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதி தனி வியாபார அலகாக நடாத்திச் செல்வதற்கு உகந்த வகையில் தயார் செய்யப்பட்டுள்ளதுடன் கேள்விப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த போதும் கேள்விப் பத்திரங்களைப் பெறுக்கொள்வதற்கு எந்தவொரு நபரும் முன்வராமை காரணமாக பயன்படுத்தப்படாது காணப்படுகிறது. | 2024 ஆம் ஆண்டுக்காக பகுதியளவில் வாடகைக்கு விடுவதாக | சொத்துக்களின் பயன்பாட்டுக்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையில் கருத்து தெரிவித்தல் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியில் 36 வெற்றிடங்கள் நிலவியது. | உள்ளுராட்சி ஆணையாளருக்கு அறிவூட்டப்பட்டுள்ளதாக | வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொலனறுவை பிரதேச சபையின் பணியாட்டொகுதியில் 23 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெறாது ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஒரே இடத்தில் தொடர்ச்சியாக கடமை புரிவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. | இணைந்த சேவைகளின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் இடமாற்றங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழு மூலம் வருடாந்தம் மேற்கொள்ளப்படுவதாகவும், ஏனைய சேவை இடமாற்றங்கள் திணைக்கள இடமாற்றங்கள் என்பதுடன் அவை உள்ளூராட்சி திணைக்களம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டுமென. | உரியவாறு இடமாற்றம் மேற்கொள்ளல் வேண்டும். |